## திருப்பூர் மாவட்டம், ருத்ராவதி முதல்நிலை பேரூராட்சி
## மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2010 – 2011

**1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்**
**(தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும்**

**ந.க.எண். 15/2010** **நாள். 10.06.2010**

திருப்பூர் மாவட்டம், ருத்ராவதி பேரூராட்சியில் 2010–2011ம் ஆண்டு **அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில்** கீழ்க்காணும் வேலை செய்து முடிக்க தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மேற்காணும் வேலைக்கான ஒப்பந்தப்படிவங்கள் 23.06.2010 **புதன்கிழமை** மாலை 5.00 **மணிவரை** உரிய தொகையை ருத்ராவதி பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேற்காணும் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளிகள் ருத்ராவதி பேரூராட்சியில் **24.06.2010ஆம்** தேதி **வியாழக்கிழமை** பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 24.06.2010**ஆம்** தேதி **வியாழக்கிழமை** பிற்பகல் 3.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விவரங்களை அலுவலக வேலை நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

### நிபந்தனைகள்

1. ருத்ராவதி பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும்.
2. குறிப்பிடப்பட்ட வேலைக்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகை ரசீதுடன் இணைத்து கொடுக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறிப்பிடப்பட்ட கால அளவிற்கு பின்னர் வரும் ஒப்பந்தப்புள்ளிகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
3. வைப்புத் தொகையை ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளிகள் செயல்அலுவலர் , ருத்ராவதி பேரூராட்சி என்ற முகவரியிட்டு உறையின் மேல் பகுதியில் எந்த வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி எனத்தெளிவாக எழுதிக் கொடுக்க வேண்டும்.
5. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ளவோ அல்லது காரணம் எதுவும் காட்டாமல் நிராகரிக்கவோ செயல்அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
6. வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும்.
7. வேலை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் ரூ. 20/– மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்தம் எழுதித்தர வேண்டும்.
8. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலைகளை முழுமையாக முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் வேலையை ரத்து செய்யவும் அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.
9. வேலை உத்திரவு வழங்கப்பட்ட பின் வேலையை ஆரம்பிக்கப்படாமல் காலதாமதம் ஏற்படும் போது மேற்படி வேலையை ரத்து செய்து மீண்டும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நிலையில் முன்னர் செலுத்திய வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.
10. சாலை வேலைகள் முழு அளவில் முடித்த பின்னரே முழுத்தொகையும் வழங்கப்படும்.
11. பேரூராட்சியில் சிமெண்ட் இருப்பு இல்லாத போது ஒப்பந்ததாரர்களே சொந்த பொறுப்பில் வாங்கிக் கொள்ளவேண்டும்.
12. கட்டுமான வேலைக்கான சேகரம் செய்யும் பொருட்கள் பொறியாளரால் ஏற்றுக் கொள்ளும் அளவில் தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்.
13. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளாதவருடைய வைப்புத்தொகை சம்மந்தப்பட்டவரின் விண்ணப்பத்தின் பேரில் காசோலை மூலம் திருப்பி வழங்கப்படும்.
14.

| | | |
|---|---|---|
| 1. | கூடுதல் வைப்புத் தொகை | 3% |
| 2. | வருமானவரி | 2% |
| 3. | வருமானவரி மேல்வரி | 10% |
| 4. | கல்வி வரி | 3% |
| 5. | விற்பனைவரி | 2% |
| 6. | விற்பனைவரி மேல்வரி | 5% |

| | | |
|---|---|---|
| 7. | தொழிலாளர் நலச்சந்தா | 0.3% |
| 8. | தொழில்நுட்ப உதவியாளர் ஊதியம் | வேலைப்பட்டியல்படி |
| 9. | நிறுத்தி வைக்கப்படும் தொகை | ஏதாவது இருந்தால் அத்தொகை மட்டும். |

15. சம்மந்தப்பட்ட வேலைக்கான வைப்புத்தொகை தணிக்கை முடிவுற்று, தடை ஏதும் இல்லையெனில் காசோலை மூலம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும்.
16. வேலைகள் தொடர்பாக அரசால் வெளியிடப்படும் அன்றைய நிலையிலான உத்திரவுகளுக்கு ஒப்பந்ததாரர் கட்டுப்பட்டவராவார்.
17. பணிகள் துவங்கும் நிலை நடைபெறும் நிலை மற்றும் முடிவுறும் நிலை ஆகிய நிலைகளில் புகைப்படங்கள், எடுத்து சமர்ப்பிக்க வேண்டும்.
18. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை ரூ.5.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்கான http://townpanchayats.tn.gov.in/tender/ என்ற பேரூராட்சிகளின் இணைய தளத்திலும், ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்காக http://tenders.tn.gov.in/ என்ற தமிழக அரசு இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
19. இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகளை செய்து முடிக்க வேண்டும்.
20. e-tender மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து, ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கும் மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

## அட்டவணை

## அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–2011

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஷெட்யூல் கிரயத் தொகை ரூ. | வைப்புத் தொகை ரூ | வேலை முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | **1. பேருந்து செல்லும் பிரதான சாலை தார்சாலையாக மாற்றுதல்**<br>1. வார்டு எண்.15ல் கரிச்சிக்காட்டுப் புதூரிலிருந்து ஏற்கனவே உள்ள தார்சாலையிலிருந்து காளிபாளையம் ரோடு வரை தார்சாலை அமைத்தல். நீளம்.650மீ. | 8,80,000 | 3540 | 17600 | 90 நாட்கள் |
| 2. | 2.வார்டு எண்.12 எரகாம்பட்டி சாலை எஸ்பெண்டிலிருந்து கோவிந்தாபுரம் செல்லும் சாலை தார்சாலையாக மாற்றுதல். நீளம்.730மீ | 12,20,000 | 7080 | 24400 | 90 நாட்கள் |
| 3. | **2, சமுதாயக் கூடம் கட்டுதல்**<br>3. ருத்ராவதி பேரூராட்சி அலுவலக வளாகத்தில் சமுதாயக் கூடம் கட்டுதல் | 10,00,000 | 7080 | 20000 | 180 நாட்கள் |
| 4. | **3. பேரூராட்சிப் பகுதியில் குளம் குட்டை மேம்படுத்துதல்.**<br>4. கணபதிபாளையத்தில் உள்ள குட்டையை மேம்படுத்துதல் | 2,00,000 | 708 | 4000 | 60 நாட்கள் |
| 5. | 5. குண்டடம் தொலைபேசி நிலையம் பின்புறம் உள்ள குட்டையை மேம்படுத்துதுல் | 3,00,000 | 1770 | 6000 | 60 நாட்கள் |
| 6. | **4. பேரூராட்சி குடிசைப் பகுதியில் உள்ள சாலைகள் மற்றும் குறுகிய சந்துகளுக்கு கான்கிரீட் சாலை அமைத்தல்.**<br>6. வார்டு எண்.3 சேடபாளையம் அரிசன காலனியில் காங்கிரீட் தளம் அமைத்தல். நீளம்.390மீ. | 5,30,000 | 3540 | 10600 | 45 நாட்கள் |
| 7. | **5. பேருந்து நிலையம் / நாளங்காடிகள் / சந்தை கட்டுமானப்பணிகள் / மற்றும் அடிப்படை வசதி செய்தல்**<br>7. குண்டடம் சந்தை பேட்டையில் வணிக வளாகம் கட்டுதல் 6 கடைகள் (10' x 16') | 10,20,000 | 7080 | 20000 | 180 நாட்கள் |
| 8. | **6. சுடுகாடு இடுகாடு மேம்பாடு செய்தல்**<br>8. சேடபாளையம் சுடுகாடு மேம்பாடு செய்தல். | 3,25,000 | 1770 | 6500 | 90 நாட்கள் |
| 9. | 9. ருத்ராவதி சுடுகாடு மேம்பாடு செய்தல். | 2,30,000 | 1770 | 4600 | 90 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 7. <u>பேரூராட்சி விருப்பப்படி அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளுதல்</u> | | | | |
| 10. | 10. வார்டு எண்.5 ராமசாமி வீட்டிலிருந்து அரிசன காலனி வரை சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல். நீளம்.135மீ. | 2,00,000 | 708 | 4000 | 45 நாட்கள் |
| 11. | 11. வார்டு எண்.5 குடிநீர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து காமாட்சியம்மன் கோயில் வரை காங்கிரீட் தளம் அமைத்தல் நீளம்.125மீ. | 1,80,000 | 708 | 3600 | 45 நாட்கள் |
| 12. | 12. வார்டு எண்.10 சங்கப்பாளையத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 1,70,000 | 708 | 3400 | 45 நாட்கள் |

[signature] 10.6.2010

செயல்அலுவலர்
ருத்ராவதி பேரூராட்சி
திருப்பூர் மாவட்டம்

<u>பெறுதல்:</u>
அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்.

<u>நகல்:</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர் , திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர் , ஈரோடு மண்டலம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. திரு. அ.கணேசமூர்த்தி, ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர், ஈரோடு அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4. மாண்புமிகு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் துறைமுகம் துறை அமைச்சர் / சட்டமன்ற உறுப்பினர், முத்தூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) ஈரோடு அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
6. உதவி பொறியாளர் (பேரூராட்சிகள்) காங்கயம் பேரூராட்சி.
7. செயல்அலுவலர், திருப்பூர் மாவட்ட பேரூராட்சிகள் அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய அனுப்பப்படுகிறது.
8. ஆணையாளர், மாநகராட்சி , திருப்பூர்
9. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், குண்டடம் , தாராபுரம், திருப்பூர், மூலனூர், வெள்ளகோவில் அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய அனுப்பப்படுகிறது.
10. செயல்அலுவலர், வெள்ளகோவில். பல்லடம், நல்லூர், 16 வேலம்பாளையம் (மூன்றாம் நிலை) நகராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய அனுப்பப்படுகிறது.
11. அலுவலக விளம்பர பலகைக்கு.
12. தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ருத்ராவதி பேரூராட்சி.
13. சம்மந்தப்பட்ட கோப்பு.